பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 22 நாள்: 13.02.2018

# பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் 2018–2019 ஆண்டிற்கான உயிர்ச்சான்றிதழ் சரிபார்ப்புக்கு வருதல் குறித்து அறிவிப்பு

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து 2018–2019ம் ஆண்டிற்கான உயிர்ச்சான்றுகள் மார்ச் மாதம் 1–ம் தேதி முதல் ஜூன் மாதம் 30–ம் தேதி வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியப்பிரிவில் பெற்றுக் கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ.எண் | விவரம் | உயிர்ச்சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டிய மாதம் |
|---|---|---|
| 1. | 31.12.1979 வரை ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் (ம) குடும்ப ஓய்வூதியம் | மார்ச் 2018 |
| 2. | 01.01.1980 முதல் 31.12.1989 வரை ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் (ம) குடும்ப ஓய்வூதியர்கள் | ஏப்ரல் 2018 |
| 3. | 01.01.1990 முதல் 31.12.1999 வரை ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் (ம) குடும்ப ஓய்வூதியர்கள் | மே 2018 |
| 4. | 01.01.2000 முதல் பிப்ரவரி 2018 வரை ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் (ம) குடும்ப ஓய்வூதியர்கள் | ஜூன் 2018 |

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவரும் உயிர்ச்சான்றிதழ் சமர்ப்பிக்க வரும்போது ஆதார் அட்டை மற்றும் நிரந்தர கணக்கு அட்டை (PAN CARD) நகல்களுடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி